# ஐவகை நிலங்களில் கூத்துக்கள் அன்றும் இன்றும்

**செ. மகேஸ்வரி**
**முனைவர் பட்ட ஆய்வாளர்**
**தமிழ் பல்கலைக்கழகம்,**
**தஞ்சாவூர்**

உலகிலுள்ள நிலப்பகுதிகள் அனைத்தும் ஒரே அமைப்புடையன அல்ல. பனி நிலமும், தமிழ் நிலமும் வெவ்வேறு நிலையை உடையனவாகும். பனி நிலம் பூமியின் வட, தென் கோடிகளில் அமைந்துள்ளது. தமிழகம் ஏறக்குறைய நில நடுப்பகுதியைச் சேர்ந்திருப்பதால் வெப்பம் மிகுதியாக உடையது. தமிழர்கள் தமிழக நிலப்பகுதியை குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என ஐந்து வகையாகப் பிரித்தனர். இந்நில அமைப்பாலும், அங்கு அமைந்த தட்பவெட்ப நிலையாலும், ஒவ்வொரு நிலத்தினுடைய மக்களின் பழக்கவழக்கங்கள், உடை, உணவு, பண்பாடு முதலியன வேறுபடுவதை முடிகிறது.

**நிலங்களும் அவற்றின் விளக்கங்களும்**

நில அமைப்பில் இயற்கைக்கு ஏற்ப நிலங்கள் பாகுபடுத்தப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு:

மலையும் மலைச்சார்ந்த இடமும் - குறிஞ்சி
காடும் காடு சூழ்ந்த புல்வெளியும் - முல்லை
வயலும் வயல் சூழ்ந்த பகுதியும் - மருதம்
கடலும் கடல் சார்ந்த நிலமும் - நெய்தல்
நீர் வளமற்ற பகுதி - பாலை எனச் சூட்டப்பட்டது.

**ஐவகை நிலத்து மக்கள்**

நிலங்களின் அடிப்படையிலேயே அவற்றில் வாழ்ந்தவர்களுக்குப் பெயர் வழங்கலாயிற்று.

1. குறிஞ்சி நில மக்கள் - குறிஞ்சி நிலக் குறவர்கள்
2. முல்லை நில மக்கள் - முல்லை நிலத்து ஆயர்கள்
3. மருத நில மக்கள் - மருத நில உழவர்கள்
4. நெய்தல் நில மக்கள் - நெய்தல் நில பரதவர்கள்
5. பாலை நில மக்கள் - பாலை நிலத்து மறவர்கள்

| நிலம் | தெய்வம் | ஊர் | தொழில் | உணவு |
|---|---|---|---|---|
| குறிஞ்சி | முருகன் | சிறுகுடி | வேட்டையாடுதல் | மான், உடும்பு,பன்றிஇறைச்சி, தேன்,மூங்கில்,அரிசி, பலாக்கொட்டை மாவு |
| முல்லை | திருமால் | | ஆடு, மாடுகள் மேய்த்தல் | தினையரிசி, பால், மோர், தயிர், வெண்ணெய், பாலால் ஆன பானங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| மருதம் | இந்திரன் | | பயிர் செய்தல் | வயலில் விளைந்த விளைச்சல் பொருள்களான அரிசி, கம்பு, சோளம், காய்கறிகள் |
| நெய்தல் | வருணன் | | பாக்கம் | மீன்படித்தல், உப்பு விளைவித்தல் பனைமர கள் அருந்துவர், மீனை சமைத்து உண்பர் |
| பாலை | துர்க்கை | | வழிப்பறி, கொள்ளையடித்தல் | வழிப்பறி செய்த உணவுப் பொருள்களை உண்பர் |

**கூத்துக்கள் - பெயர்க்காரணம்**

தொல்காப்பியர் காலத்தில் கூத்து, நாடகம், நாட்டியம், ஆட்டம், ஆடல் முதலிய சொற்கள் நாட்டியக் கலையை குறித்து வந்துள்ளன.' கூத்துக்களை திணைகள் மற்றும் நிலங்கள் வாரியாகப் பிரித்தனர். ஐவகை நிலங்களில் அகத்திணை, புறத்திணை மற்றும் அகப்புறக் கூத்துக்களாக வகைப்படுத்தி உள்ளனர்.

அகத்திணைகள், புறத்திணைகள், கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை, வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், காஞ்சி

**அகக்கூத்துக்கள் புறக்கூத்துக்கள்**

குரவை, துணங்கை, குரவை துணங்கை, வெறியாட்டுக் குரவை. 1. முன்தேர் 2. பின்தேர் துணைங்கை 1. போர் 2. பேய் வெறியாட்டு, வாடாவள்ளிக்கூத்து, கழல்நிலைகூத்து, துடிக்கூத்து, வாளமலைக்கூத்து

**ஐந்து நிலங்களில் அகத்திணைக் கூத்துக்கள்**

அகத்திணைக் கூத்துக்கள் மக்களின் அக வாழ்வில் இடம் பெறும் நிகழ்ச்சியான காதலை மையமாகக்கொண்டு கூத்துக்கள் நிகழ்த்தப்பட்டன. கூத்து நிகழும்போது காதலர் ஒருவரை ஒருவர் சந்தித்து காதலை வளர்த்துக் கொள்ள வாய்ப்பாக அமைந்த அக வாழ்வு கூத்துக்கள் அந்தந்த நிலங்களில் காலச்சூழலுக்கு ஏற்ப ஆடப்பட்டன.

அகத்திணைகளில் ஆடப்பட்டதாக முதலில் இடம் பெறுவது குரவைக் கூத்தாகும். இக்குரவை ஐந்து நிலங்களிலும் அவரவர் காலம், நேரம், சூழலுக்கு ஏற்ப ஆடப்பட்டன. குறிஞ்சி நிலக்குரவை மலைநிலத்து மக்களான குறவர்கள் தங்கள் பெண்டிரோடு, பழனிய தேறலும், நறவும் அருந்தி ஆடினர். இந்நடனம் மகிழ்ச்சியில் ஆடப்பட்டதாக இருந்தன.

**“வேங்கை முன்றிற் குரவையும் கண்டே” (நற்றிணை :276:10)**

**“கார்மலர் குறிஞ்சி சூடிக் கடம்பின்**
**சீர்மிகு நெடுவேட் பேனித் தழூஉப்பினையூஉ**
**மன்றுதொறும் நின் குரவை” (மதுரைக்காஞ்சி : 613-615)**

**முல்லை நிலக்குரவை**

முல்லைத்திணை மக்கள் வேட்டுவர் என்பதால் அந்நிலம் காட்டு நிலமாக இருந்ததாலும், அதில் வாழ்ந்த மக்கள் அன்புறு காதலர்களாகப் பங்கேற்று அன்பு வயப்பட்டு ஆடிய நடனமாக குரவை இடம் பெறுகின்றது. கலித்தொகையில்

**“பண்ணமை இன்சீர்க் குரவையுள்” (கலித்தொகை :102:35) என்று** குறிப்பிடப்பட்டுள்ளது.

மருத நிலக்குரவை

ஆடவர் போலவே மருத நில மகளிரும் தென்னங்கள் தேறலை அருந்தி குரவையாடினர். மருத நிலத்து உழவர் வெயில் வேளையில் நெல்லரிந்த தம் பணியின் களைப்புத் தீர மகிழ்ந்து அங்கேயே குரவையாடி மகிழ்ந்தனர். மருதத்திணை வயல்பகுதி என்பதால் இவர்கள் ஆடிய குரவை.

**“குறும்பல் யாணர்க் குரவை அயரும்” (பதிற்றுபத்து 73:4-7)**

என்று பதிற்றுப்பத்தில் இடம் பெற்றுள்ளன.

**நெய்தல் நிலக்குரவை**

நெய்தல் நிலக்குரவை பெரிதும் பெண்களே நிகழ்த்தினர். பரதவ மக்களின் குரவை மிகுந்த ஓசையுடன் நிகழ்ந்தது. இது தைத்திங்களில் நடந்தமையால் தைந் நீராடலுடன் தொடர்புடைய குரவையாக இருக்கலாமெனக் கருதப்படுகிறது.

**“பொய்தல் ஆடிய பொய்யா மகளிர்**
**குப்பை வெண்மணல் குரவை நிறுஉம்” (ஐங்குறு நூறு 181:2-3)**
**“கொண்டால் இடுமணல் குரவை முனையின்**
**வெண்டலைப் பனரி ஆயமொடு ஆடி” (அக நானூறு 20:78)**

பாலை நிலக்குரவையை

**“குலாஅ வல்வில் கொடுநோக்கு ஆடவர்**
**புலாஅல் கையர் பூசா வாயர்**
**ஒராஅ உருட்டும் குடுமிக் குரலொடு**
**மராஅஞ் சீறுர் மருங்கில் தூங்கும்**
**செந்நுதல் யானை வேங்கடம்” (அகநானூறு : 265: 17-21)**
**கோசர் ஆடிய குரவை என**
**“தீங் குரவைக் கொளைந் தாங்குத்து” (புறநானூறு: 129: 2-3)**

என்று புறநானூறு விளக்குகின்றது.

**துணங்கை கூத்து**

துணங்கை தழுவிக்கொண்டு ஆடும் ஆடல். குரவையும், துணங்கையும் இரட்டைக் கூத்துக்கள் ஆகும். துணங்கையில் மகளிர் மட்டுமே பங்கு கொள்வர். இதனை,

**“மகளிர் தழீஇய துணங்கை யானும் ….. (குறுந்தொகை 31:2)**

**இணையொலி இமிழ் துணங்கை சீர்ப்**

**பிணையூபம் எழுந்தாட்”(மதுரைக்காஞ்சி :26-27)** என்ற வரிகளால் அறியலாம்.

பரத்தையர் மனையிலும், பரத்தையரால் அதிகம் ஆடப்பட்ட கூத்து ஆதலால் நெய்தல் நிலங்களில் இக்கூத்து அதிகம் இடம் பெற்றிருக்கலாம். துணங்கை அகத்திணையைவிட புறத்திணையில் மிகுதியாக ஆடப்பட்டுள்ளது.

**வெறியாட்டு**

குறிஞ்சி, முல்லை நிலத்தில் வெறியாட்டு அதிகம் இடம் பெற்றது. அகத்திணையில், காதல் மையல்கொண்ட தலைவி வெறியாடல் புரிவாள். இது வீட்டு நிகழ்ச்சியாய் அமையும். வேலனை தாய் அழைத்து வெறி நிகழ்த்தி, தனது மகளின் பசலை நோயை தீர்க்கவேண்டி வேலனிடம் முறையிடுவாள்.

**"அணங்கறி கழங்கிற் கோட்டங்காடி**
**வேறியென வுணர்ந்த உள்ளமொடு மறியறுத்து**
**அன்னை அயரும் முருகநின்**
**பென்னோ் பசலைக் குதவா மாறே" (நற்றிணை 47:8-11)**

என்பதால் அறியலாம்.

வெறியாட்டு ஆடவா் மட்டுமின்றி மகளிரும் ஆடுவா். மகளிா் வெறியாடலை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1. அணங்குறு மகளிா்
2. பேய் மகளிா்
3. சூரர மகளிா்

**ஐவகை நிலங்களில் புறத்திணைக் கூத்துக்கள்**

போர் சம்பந்தமாக போர்க்காலங்களில் ஆடப்பட்டக் கூத்துக்களே புறத்திணைக் கூத்துக்கள் (புறம் - வெளிப்பகுதி). போர்க்கூத்துக்கள் பொதுவாக நிலங்களில்தான் நிகழ்ந்திருக்க வேண்டும். மக்களுக்குப் பாதிப்பு ஏறபடாதவகையில் உள்ள நிலங்களாகத் தேர்ந்தெடுத்து நிகழ்த்தியிருக்க வேண்டும்.

**குறிஞ்சி நில வேலன் வெறியாடல்**

தன் வேந்தனுக்கு வெற்றி வேண்டி வேலன் காந்தள் பூச்சூடி வெறியாடுதலை குறிக்கிறது. குறிஞ்சி நில தெய்வம் வேலன். அவனுக்கு உரிய செவ்வேளைத் தாங்கி இருப்பவனை வேலன் என்றும், பூசாரி என்றும், குறிப்பர். இவனே அப்பெருமானுக்குரிய காந்தள் மலா்சூடி வெறியாடுவான்.

முருகனை வழிபடும் வேலன் என்பவன் முருகு ஏறப்பெற்று வெறியாட செவ்விய சொற்களால் வீரா்களின் கடமைகளைக் கூறி உணா்த்துவான். இதனை

**"வெறியறி சிறப்பின் செவ்வாய் வேலன்**
**வெறியாட்டு அயா;ந்த காந்தளும்" (தொல் பொருள் : 63-1)**

இந்த வெறியாடலுக்கு "வெறியாட்டு அயா்ந்த காந்தள்" என்ற பெயா் தொல்காப்பியா் காலத்திற்கு முன்னரே இருந்தது.

| | | |
|---|---|---|
| காந்தள் என்பது | - | எரியும் நெருப்பு போன்ற நிறமுடைய ஒருவகை மலா் |
| செவ்வாய் வேலன் என்பது- | | செம்மையான சொற்களால் கருத்துக்களைத் தெரிவிக்கும் வேலன் |
| வெறியறி சிறப்பின் என்பது- | | போர் வெற்றி பற்றி வேலன் வாயினின்று அறியும் சிறப்பு |

**குறிஞ்சி நில வாடாவள்ளி (வள்ளிக்கூத்து)**

போர்க்கூத்துகளுள் ஒன்றாக வைத்துப் பேசப்படுவது வாடா வள்ளி என்னும் வள்ளிக்கூத்தாகும். வாடும் வள்ளியினின்றும் ஆடும் இக்கூத்தினை வேறுபடுத்திக் காட்டினர். வெற்றி வேண்டி முருகனைப் பரவிப் பாடிப் பெண்டிர் ஆடும் கூத்து. இது குறிஞ்சி நிலத்தில் நிகழ்வது என்று இளம்பூரணர் குறிப்பிடுகின்றார்.

**"வாடாவள்ளி வயவர் ஏத்திய" (தொல்: புறத் :17)**

இக்கூத்து கதைக்கருவின் அடிப்படையில் அமைந்த கதைத் தழுவி எழுந்த கூத்தாக வளர்ச்சி பெற்று நாடகங்களின் முன்னோடியாக விளங்கிய கூத்து. வள்ளை என்பது வள்ளை பாட்டினையும், வள்ளைக் கொடியினையும் குறிப்பதுபோல வள்ளி என்பது வள்ளிக் கொடியினையும், வள்ளிக் கூத்தினையும் குறித்தது.

வள்ளைப்பாட்டு - குறு மகளிரிசை படு வள்ளையும் (மலைபடுகடாம்: 342)

வள்ளைக்கொடி - வள்ளை நீக்கி வயமீன் முகந்து (மதுரைக்காஞ்சி: 395)

வள்ளியும், முருகனும் குறிஞ்சி நிலத்திற்குரியவர்கள். ஆதலின் குரவை போல குறிஞ்சி நிலக்கூத்தாகவும், குழு நடனமாகவும், இருந்துள்ளது எனப் புலனாகிறது. குரவையிலிருந்து இரண்டு செய்திகளில் வேறுபட்டுள்ளது. அவை:

1. புனைதல்
2. கதைத் தழுவாதது குரவை

வள்ளிக் கூத்து ஒப்பனையில் வெறியாட்டினை ஒத்தது. வேலனாடலில் வேலன், முருகனைப் போல புனைந்து கொள்வதுபோல, வள்ளிக் கூத்தில், வள்ளிக் கோலம் புனைகிறாள். வேலனாடல் போல வள்ளிக் கூத்தும், குறிஞ்சி நிலத்திற்குரிய புறத்திணைக் கூத்தாகும்.

**நெய்தல் திணையும் தும்பைப்போரும்**

நெய்தல் திணைக்குப் புறத்திணையாக தொல்காப்பியர் தும்பை திணையினைக் குறிப்பிட்டுள்ளார். நெய்தல் நில மக்கள் தங்களின் பொழுதுபோக்காக ஆடும் கூத்து. இதில் இருவருள் யார் வலியர் என்பதைத் தீர்மானிக்கும் நோக்கில் நிகழும் போர் தும்பைப்போர். வெற்றி பெற்றவர் தும்பை எனும் மலரைச் சூடி மகிழ்வர்.

**"தும்பை தானே நெய்தலது புறனே**
**மைந்துபொருளாக வந்த வேந்தனைச்**
**சென்றுதலை அழிக்கும் சிறப்பிற் றென்ப" (தொல் நூ: 70)**

**பாலைநிலம் - துடிக்கூத்து**

பாலை நில மறக்குல தலைவன் ஒருவன் துடிக் கூத்தாடியதைப் பெரும்பாணாற்றுப் படை அழகுற விளக்கியுள்ளது. மறக்குலத் தலைவன் பகைவரை அவர்களது காவலுடைய முல்லை நிலத்திலேயே சென்று விடியற்காலையிலேயே அவர்களது பசுக்களை அடித்துக்கொண்டு போய் அவற்றைக் கள்ளுக்கு விலைபேசி வலிமையுள்ள ஏற்றை அறுத்து தின்று, தோலை மடித்துப் போர்த்த மத்தளம் முழுங்க இடத்தோளை எடுத்து வலப்பக்கத்திலேயே வளைந்து பகற்பொழுதிலே மகிழ்ச்சியுடன் ஆடினான். இதனை

**"கேளா மன்னர் கடாபுலம் புக்கு**
**நாளாதநது நளவு தொலை தெலைச்சி**

**இல்லடு கள்ளின் தோப்பி பருகி**
**மல்லின் மன்றத்து மதவிடை கெண்டி**
**மடிவாய்த் தன்னுமை நடுவர் சிலைப்பப்**
**பகன் மகிழ் தூங்கும் தூங்கா விருக்கை" (பெரும்பாண்: 140-146)**

இக்குறிப்பின் மூலம் துடிக்கூத்து, கருவி தழுவி ஆடிய கூத்து என்றும், பாலை நிலத்து வெற்றி மறவன் ஆடுவது எனவும், பகல் நேரத்தில் நிகழ்ந்தது எனவும் அறியலாம்.

மேலும், போரில் வென்ற வீரர் மகிழ்ச்சி மிகக்கொண்டு ஆடும் கூத்து ஆகும். புறத்திணையில் போர்க்கூத்து வகையை சார்ந்தது எனவும், துடி எனும் கருவியை இசைத்து ஆடுவதாகவும் உள்ளது. புறத்திணை மரபில் துடிநிலை என்ற துறையில் அடங்கும்.

**(எ.கா) "மறங்கடைக் கட்டிய துடிநிலை" (தொல்.புறத்: 47)**

**பாலைநிலம் - வாளமலைக்கூத்து**

போர்க்களத்தில் வீழ்ந்த அரசனை வாகைச் சூடிய வேந்தரின் வீரர்கள் நெருங்கி நின்று அவன் சிறப்பினைப் பாடுதலை இத்துறை சுட்டுகிறது என்று இளம்பூரணர் சுட்டிக் காட்டுகிறார்.

இதற்கு நச்சினார்க்கினியர் தம்முடைய உரையில் "அங்ஙனப் நின்றுபட்ட வேந்தனைக் கொன்ற வேந்தன் படையாளர், விழுந்து மட்டோனைச் சூழ்ந்து நின்றாடுள் திரட்சிக் கண்ணும் என விளக்குகிறார். அதாவது பகைவனுடைய யானையைக் கொன்று வெற்றிபெற்ற வேந்தனுடைய வீரர்கள் வாள்களைக்கொண்டு போர்களத்தில் இறந்துவிட்ட மன்னைச்சுற்றி நெருங்கிப்பாடி ஆடுவது வாளாமலை என்ற கூத்தாகும். வீரக்கழலணிந்த மறவரும், வேந்தருமாகப் போர்க்களத்தில் ஆடும் வெற்றிக் கூத்தாக இதனைக் கருதினார்.

**"பட்ட வேந்தனை அட்ட வேந்தன்**
**வாளோர் ஆடும் அமலை"**

இக்கூத்து குரவை, துணங்கை போல குழு நடனமாகும்.

**பாலை நிலம் - கழல் நிலைக் கூத்து**

மழலைப்பருவத்தான் ஒருவன் போர்க்களத்தில் மாற்றாரைக் கண்டு ஓடாது நின்றமைக் கண்டு அவன் காலிற் கட்டிய வீரக்கழலை மறவர்கள் புனைந்து போற்றுதலைக் குறிப்பதாக உள்ளது. இதனைக் கழனிலை கூத்து எனவும் குறிப்பர்.

இக்கழல் நிலைக் கூத்து வீரர்கள் ஆடுவது. அதாவது, போர்க்களத்தில் எதிர்த்துநின்று போரில் சாதனை புரிந்த மறவனுக்கு கழல் அணிவித்து வீரர்கள் மகிழ்சசியினால் வீரப்பெருமிதத்தோடு ஆடும் கூத்தாக அமைந்துள்ளது. இது ஒரு குழு நடனமாகும். இதனை தொல்காப்பியர்

**"….. வயவர் ஏத்திய ஓடாக்கழல் நிலை" (தொல். புறத் :5)**

என்று குறிப்பிடுகிறார்.

**பாலைநிலத்து - குரவை**

பாலை நிலத்தில் இருபெரும் குரவைகள் ஆடப்பட்டன. அவை போர்களத்தில் வீரர் ஆடியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

1. முன் தேர் குரவை
2. பின் தேர் குரவை

**முன் தேர் குரவை**

தேரில் ஊர்ந்து வந்த அரசர் பலரையும் வென்று வாகை சூடிய வேந்தன், வெற்றிப் பெருமிதத்தில் தேர்த்தட்டில் நின்று போர்த்தலைவனோடு கைப்பிணைத்தாடும் குரவைக் கூத்தே முன் தேர்க்குரவையாகும். இதனை

**"வென்ற கோமான் முன்றேர்க் குரவையும்" எனச் சுட்டுகிறது.**

**பின் தேர் குரவை**

வெற்றி பெற்ற அரசனின் வெற்றியைப் போற்றும்வகையில் போர்க்களத்தில் அவன் தேருக்கு பின்னே நின்று ஆடும் குரவையாக உள்ளது. இதனை, "ஒன்றிய மரபின் பின்றோ;க் குரவையும்" எனக் குறிப்பிடுகிறது. இக்குரவைகள் இரண்டும் பாலை நிலத்தில் நிகழ்த்தப்பட்ட கூத்துக்களாகும்.

**பாலை நிலத்து - துணங்கைக் கூத்து**

குரவையைப் போலவே பாலை நிலத்தில் துணங்கைக் கூத்து நிகழ்த்தப்பட்டது. இக்கூத்து இருவகைப்படும்:

1. போர்த்துணங்கை
2. பேய்த்துணங்கை

**போர்த்துணங்கை**

போர்க்களத்தில் படைவீரர்கள் வெற்றிக் களிப்பில் பிணங்கள் மீது ஏறி ஆடியுள்ளார். பிணங்கள் குவிந்து உயர்ந்து கிடக்கும் பாலை நிலத்தில் துணங்கைக் கூத்து நிகழ்த்தியிருக்கின்றனர்.

**பேய்த்துணங்கை**

போர்க்களமாக காட்சியளிக்கும் பெரிய அம்பலங்களில் இரு பெரும் பாதங்களையும், கடுமையான பார்வையையும் உடைய பேயாகிய மகளிர், உலாவி ஆடியிருக்கின்றனர் என்றும், மெல்லிய துகிலை உடுத்தியது போல நின்ற பூதங்கள் துணங்கைக் கூத்தை ஆடியிருக்கின்றனர் என்பதைக் கீழ்காணும் வரிகளால் அறியலாம்.

**"நினம் வாய்ப் பெய்த பேய் மகளிர்**
**இணையொலியிமிழ் துணங்கைச்சீர்**
**பிணையூபம் எழுந்தாட**
**விலங்குகளை மட மங்கையர்**
**துணைங்கையஞ்சீர் தழூஉ மறப்ப**
**விழுவு நின்ற வியன் மறுகில்**
**துணங்கையந் தழூஉவின் மணங்கழ் சேரி" (பெரும்பாண் : 458:60)**

இதில் போருக்குப்பின் பேய்கள் ஆடிய துணங்கையாகக் குறிக்கப்பட்டுள்ளது. பூதங்கள் ஒருவரை ஒருவர் தழுவி ஆடிக் கொண்டதாகவும் கூறப்படுகிறது.

**இன்றைய கூத்து வடிவங்கள்**

தொன்றுதொட்டு வந்த கூத்துக்கள் தற்கால முறைகளில் வளர்ச்சிபெற்று பெரும் மாற்றத்தைக் கொண்டுள்ளன. ஆயினும் அன்றையக் கூத்துக்களைத் தழுவிய இன்றைய ஆடல்கள் சிலவற்றை பின்வரும் பகுதியில் காணலாம்.

| அன்றைய கூத்துக்கள் | இன்றைய ஆடல்கள் |
|---|---|
| மகளிர் குரவை, துணங்கை | கும்மி, கோலாட்டம் (பெண்) |

| | |
|---|---|
| **வெறியாட்டு** | **சாமியாடல் (ஆண், பெண்)** |
| **குரவை** | **ஒயிலாட்டம் (ஆண்)** |
| **வேலன் வெறியாடல்** | **கோலங்கட்டியாடுதல் (தெய்யாட்டம்)** |
| **வள்ளிக்கூத்து** | **தெருக்கூத்து (நாடக வடிவம்)** |

பழங்காலக் கூத்துக்களின் சாயல்களை இன்றும் பல ஆடல்களில் காணலாம். அன்றையக் கூத்துக்கள் பெரும்பாலும் இன்றைய நாட்டுப்புற கலைவடிவங்களில் சிறப்பாக அமைந்துள்ளன. அவற்றின் ஒற்றுமைகள் பின்வருமாறு:

மகளிர் குரவை, துணங்கை கும்மி, கோலாட்டம் முன்னேற்பாடு இல்லாமல் குரவை நடைபெறும். முன்னேற்பாட்டுடன் துணங்கை நிகழும். தக்க முன்னேற்பாட்டுடன் மற்றும் முன்னேற்பாடு இல்லாமலும் நிகழும் எளிய முறையில் குரவை நிகழும். துணங்கை பெரிய அளவில் நடக்கும் விழா எளிய மற்றும் பெரிய விழாக்கள் பொது விழாக்களிலும் இடம் பெறும். ஆண் - பெண் ஆடுவது குரவை மகளிர் மட்டும் ஆடுவது துணங்கை பெண்கள் கோலாட்டம் ஆடுவர். மகளிர் மட்டும் ஆடுவது கும்மி. ஆண்கள் பெண்கள் ஆடுவது ஒயிற்கும்மி. தழுவி ஆடுவது குரவை, கைப் புணர்ந்தாடுவது துணங்கை. கைகளைத் தட்டியும், தழுவியும் ஆடுவது கும்மி, கோல்களைத் தட்டி ஆடுவது கோலாட்டம் குழுவாக ஆடும் கூத்துக்கள் குழுவாக ஆடும் நடனம் பறை ஓசை குரவைக்கும், முழவு ஓசை துணங்கைக்கும் பின்னணி இசையாக அமையும் பறை, உறுமி, தவில், நாதஸ்வரம், கைதட்டும் ஒலி, கோல் தட்டும் ஒலிகளும் பின்னணி இசையாக அமையும்.

பகல் வேளையில் நிகழ்வது குரவை, துணங்கை இரவில் பாண்டில் விளக்கொளியில் நிகழ்வது. பகல் வேளை மற்றும் இரவு நேர கோவில் விழாக்களிலும் இடம் பெறும்

பொழுதுபோக்கு கூத்து குரவை, துணங்கை பொழுது போக்கு கூத்தன்று. பாரம்பரியத்திற்காகவும், பொழுது போக்காகவும் இடம் பெறுவதாகும். குரவையை, குறிஞ்சி, முல்லை, மருதம் நெய்தல் பாலை நிலக்குரவை மற்றும் முன்தேர்குரவை - பின் தேர்குரவை என வகைப்படுத்தலாம். துணங்கையை போர், பேய், மகளிர் துணங்கை எனப் பிரிப்பர். பாலை நிலம் தவிர மற்ற நான்கு வகையான நிலங்களிலும் கும்மி, கோலாட்டம் இடம் பெறும். கும்மி – மகளிர், அறுவடை, ஒயில் கும்மி என வகைப்படும் கோலாட்டம் - பின்னல் கோலாட்டம் எனும் பிரிவில் உள்ளன. ஐவகை நிலங்களில் பெரும்பாலும் ஆடப்படும் கூத்தாக குரவை திகழ்கிறது. இக்குரவை ஆண்கள், பெண்கள் தனியாக மற்றும் இணைந்து குரவை நிகழ்த்துவர். இக்குரவை நடனம் பண்டைய கால மக்களின் வாழக்கை நிலையை பிரதிபலிப்பதாக விளங்கியது. ஐவகை நிலங்களில் அகத்திணையில் குரவை, துணங்கை ஆடப்பட்டது போல, புறத்திணையில் பாலை நிலத்தில் பலவகையான கூத்துக்கள் நிகழ்த்தப்பெற்று அக்கால மக்களின் வாழ்வை பிரதிபலிப்பது போல அமைந்துள்ளன. தற்காலத்தில் கூறப்படும் கூத்து முறைகள் தற்காலத்தில் கும்மி, கோலாட்டம் போன்ற பல்வகை நாட்டுப்புற நடன வகையாக வளர்ச்சியுற்று இன்றளவும் பல்வேறு அரங்குகளில் நிகழ்த்தப்பெற்று வருகின்றன.

**சான்றாதாரங்கள்**

1. சோ.ந. கந்தசாமி, புறத்திணை வாழ்வியல், தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு, பக் . 75
2. க. வெள்ளைவாரணன் உரைவளம், தொல்காப்பியம் பொருளதிகாரம், புறத்திணையில், மதுரை காமராசர் வெளியீடு, 1983 இ.நூ-5.
3. நச்சினார்க்கினியர், தொல்காப்பியம், புறத்திணை இயல் 17-ம் நூற்பாஉரை.